# அகிலத்திற்கு அருட்கொடை
# அண்ணல் நபி (ஸல்)




தொகுப்பு

**பேராசிரியர் முனைவர்**

**எம். ஹெச். ஜவாஹிருல்லாஹ் M.B.A., M.Phil., Ph.D**

## எல்லாப் புகழும்
## இறைவனுக்கு மட்டுமே !


நூல் தலைப்பு : **அகிலத்திற்கு அருட்கொடை அண்ணல் நபி(ஸல்)**

முதல் பதிப்பு: அக்டோபர் 2012

தொகுப்பு : பேராசிரியர் முனைவர்
**எம்.ஹெச்.ஜவாஹிருல்லாஹ் M.B.A., M.Phil., Ph.D**



காப்புரிமை: 'இலவசமாக மட்டும்' வினியோகிக்க விரும்புபவர்கள், தகவல் தந்துவிட்டு, பதிப்பித்து, வினியோகித்துக் கொள்ளலாம்.



வெளியிட்டோர்: புத்தொளிப் பதிப்பகம்
சென்னை - 600 108.
மின்னஞ்சல் : putholipadipagam@rediffmail.com
அலைபேசி : 94433 32914

அச்சிட்டோர்: **மூன் கிராபிக்ஸ்**
11/6, கெனால் பாங்க் ரோடு,
கஸ்தூர்பா நகர், அடையார், சென்னை – 600 020
அலைபேசி : 98407 42523, 94441 45999

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்

# முன்னுரை

## நபியே நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ஒரு அருட்கொடையாகவே அன்றி அனுப்பவில்லை (திருக்குர்ஆன் 21:107)

210 கோடி முஸ்லிம்கள்–அதாவது உலகில் வாழும் நால்வரில் ஒருவர் தங்கள் உயிரினும் மேலாகக் கருதும் அண்ணல் நபி(ஸல்-அவர்கள் மீது அமைதி நிலவட்டுமாக)அவர்களை ஏளனப்படுத்தும் வகையில் அவ்வப்போது மேற்கத்திய உலகிலிருந்து படங்கள்,கேலிச்சித்தரங்கள் முதலியவை வெளியிடப்படுகின்றன. கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் அனைத்து வரம்புகளையும் மீறி வெளியாகும் இத்தகைய கருத்து பயங்கரவாதங்கள் கடும் எதிர்ப்புகளை எதிர்நோக்குகின்றன என்பதில் வியப்பேதும் இல்லை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காமுகராகவும் பெண் பித்தராகவும் இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்த இந்த பயங்கரவாதிகள் கடுமையாக முயலுகிறார்கள். நபியவர்கள் வாழ்ந்த காலக்கட்டத்தில் கூட இவ்வளவு மோசமாக யாரும் அவர்களை இழித்துரைக்கவில்லை. சூனியக்காரர், பைத்தியக்காரர், புரளியைக் கிளப்புகிறார் என்று விமர்சித்தார்களே தவிர, அண்ணல் நபியின் ஒழுக்க மாண்புகளை எவரும் விமர்சிக்கவில்லை. அவர்களது இளமைப் பருவம் குறித்து எவ்வித குற்றச்சாட்டும் முன்வைக்கப்படவும் இல்லை.

“நீங்கள் மிக உயர்ந்த பண்பாடுள்ளவராக இருக்கிறீர்” என நபிகள் நாயகம் குறித்து திருக்குர்ஆன் குறிப்பிட்டபோது இஸ்லாத்தின் எதிரிகள்கூட மவுனம் சாதித்தார்கள். சபா குன்றின் மீது ஏறி, இந்த மலைக்குப் பின்னால் இந்த மக்கமா நகரைத் தாக்குவதற்கு ஒரு படை வருகிறது என நான் கூறினால் நீங்கள் நம்புவீர்களா? எனக் கேட்டபோது அனைவரும் ஒரே குரலில், “நிச்சயமாக நாம் நம்புவோம். ஏனெனில், எந்தக் கட்டத்திலும் நீங்கள் உண்மைக்குப் புறம்பாகப் பேசியதை நாம் கண்டதில்லை. நீங்கள் அல்அமீன்-நம்பிக்கைக்குரியவர், அஸ்ஸாதிக்-உண்மை பேசுபவர்” என்று சாட்சி கூறினார்கள்.

ஒரு நிமிடம் கருத்து பயங்கரவாதிகளும் அவர்களது ஆதரவாளர்களும் சிந்திக்க வேண்டும். இவ்வுலகில் வாழ்கின்ற தலைவர்களில் எவராவது மக்கள் முன் வந்து நான் எப்போதாவது பொய் சொல்லியிருக்கிறேனா? எனக் கேட்க முடியுமா?

ஒழுக்க சீர்கேட்டின் உறைவிடங்களாக இருப்பவர்கள்தான் நபியவர்களின் ஒழுக்கத்தைப் பற்றி விமர்சிக்கிறார்கள். ஓரினத் திருமணத்தையும் விபசாரத்தையும் ஆகுமாக்குபவர்கள் 1400 வருடங்களுக்கு முன்னால் மிகச் சிறந்த ஒழுக்கசீலராக வாழ்ந்த நபி(ஸல்) அவர்களை ஒழுக்கம் கெட்டவர் எனக் கூறுவது எவ்வளவு வினோதமாக உள்ளது.

இச்சூழலில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஈடு இணையற்ற வரலாற்றுச் சாதனைகள் குறித்து அனைத்து மக்களுக்கும் எடுத்துரைப்பது காலத்தின் கட்டாயமாகும்.

அனைத்து மக்களுக்கும் வழிகாட்டுவதற்காக அருளப்பட்ட அருள்மறை திருக்குர்ஆனில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அகிலாத்தார் அனைவருக்கும் ஒரு அருட்கொடையாக அனுப்பப்பட்டுள்ளார் என இறைவன் குறிப்பிடுகிறான்.

அகிலத்தின் அருட்கொடையாக அண்ணல் நபி(ஸல்) அவர்கள் விளங்கி உலக வரலாற்றில் ஈடு இணையற்ற சாதனைகளை நிகழ்த்தினார்கள். இந்த சாதனைகளுக்கு சாட்சி கூறும் வகையில் நமது நாட்டின் சான்றோர்களும், அயல்நாட்டு அறிஞர்களும் பேசியதையும் எழுதியதையும் தொகுத்து இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது. அவர்களது கூற்றுக்கு பொருத்தமான நபிமொழிகளும் தரப்பட்டுள்ளன.

இந்த நூல் நேர்த்தியாக உருவாகி உங்கள் கரங்களில் தவழுவதற்கு பலவகையிலும் உதவி செய்த என் அருமைச் சகோதரர்கள் டி.ஏ.இஸ்மாயீல், எம்.சாதிக் பாஷா, எஸ்.யு.சையத் உஸ்மான், ராமேஸ்வரம் ரா◦பி மற்றும் ஐ.அமீன் அஹ்மத் ஆகியோருக்கும், சீரிய முறையில் அச்சிட்ட மூன் கிராபிக்ஸ் நிறுவனத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

அன்புடன்,

பேராசிரியர் முனைவர். எம்.ஹெச்.ஜவாஹிருல்லாஹ் M.B.A., M.Phil., Ph.D.

**சமத்துவத்தையும்,
சகோதரத்துவத்தையும்
தம் வாழ்க்கை வாயிலாக
மெய்பித்தவர்கள் நபிகளார் (ஸல்)**

**- சுவாமி விவேகானந்தர்**



"இதன் பிறகு வருகிறார் சமத்துவத்தின் தூதர் முஹம்மது. அவரது மதத்தில் என்ன நன்மை இருக்க முடியுமென்று நீங்கள் கேட்கலாம்? நன்மையே இல்லாமல் இருந்திருந்தால், அது எப்படி ஜீவித்திருக்க முடியும்?

நன்மை மட்டும் ஜீவித்திருக்கும்; அது மட்டுமே நீடித்து நிலைக்கும். ஏனெனில், நன்மை மட்டுமே வலிமையானது. எனவே தான் அது நீடித்து நிலைக்கிறது. இந்த உலகில் கூட அசுத்தமான மனிதனால் எவ்வளவு காலம் நிலைக்க முடிகின்றது ? பரிசுத்தமான மனிதர்களால் நீடித்து நிலைக்க முடிகின்றது அல்லவா ?

இதில் சந்தேகத்திற்கு இடமில்லை. தூய்மையும், நன்மையும் தான் வலிமையானவையாகும். முஹம்மதின் கொள்கைகளில் நன்மை ஏதும் இல்லாமல் இருந்திருந்தால், அந்தக் கொள்கை இதுவரை எப்படி நீடித்து நிலைத்திருக்க முடியும்?

அதில் ஏராளமான நன்மைகள் உள்ளன.

முஹம்மது - சமத்துவத்தின் தூதராக விளங்கினார். மனிதகுல சமத்துவத்தின் அனைத்து முஸ்லிம்களும் சகோதரர்கள் என்ற கொள்கையின் தூதராக அவர் விளங்கினார்.

ஒவ்வொரு இறைத்தூதரும் ஒரு குறிப்பிட்ட தூதுச் செய்தியைக் கொண்டவராக இருந்தார். அந்த தூதுச் செய்தியை முதலில் கேட்டு விட்டு பிறகு தூதரின் வாழ்க்கையை நீங்கள் உற்று நோக்கினால், அதில் அவரது முழு வாழ்வும் தெள்ளத் தெளிவாக பிரதிபலிப்பதை நீங்கள் பார்க்கலாம்.

முஹம்மது தனது வாழ்வின் மூலமாக முஸ்லிம்களிடையே பரிபூரணமான சமத்துவமும், சகோதரத்துவமும் இருக்க வேண்டியதை எடுத்துக் காட்டினார்.

இனம், சாதி, குலம், நிறம் அல்லது பாலியல் அடிப்படையில் வேறுபாடு என்ற கேள்வியே எழவில்லை.

துருக்கி நாட்டு சுல்தான் ஆப்ரிக்க சந்தையில் ஒரு நீக்ரோவை வாங்கி, அவரை துருக்கிக்கு சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் கொண்டு வரலாம். ஆனால் அந்த நீக்ரோ முஸ்லிமாக மாறிவிட்டால், அவரிடம் போதிய தகுதியும், திறமையும் இருந்தால், சுல்தான் மகளைக் கூட அவர் மணந்து கொள்ளலாம்.

இந்த நாட்டில் (அமெரிக்காவில்) வாழும் நீக்ரோக்களும், அமெரிக்க இந்தியர்களும் நடத்தப்படும் விதத்துடன் இதனை ஒப்பிட்டுப் பாருங்கள். மேலும் இந்துக்கள் என்ன செய்கிறார்கள்?

உங்கள் பிரச்சாரகர்களில் ஒருவர் (அமெரிக்க கிறித்தவப் பிரச்சாரகர்) வைதீகத்தனமுடைய மனிதர் ஒருவரது உணவைத் தொட்டு விட்டால், வைதீகர் அதனைத் தூக்கி எறிந்து விடுவார். நமது மாபெரும் தத்துவம் ஒருபுறம் இருப்பினும், செயலளவில் நமது பலவீனத்தை நீங்கள் கவனிக்க வேண்டும்.

இனங்களைக் கடந்து, இன அல்லது நிறத்திற்கு அப்பாற்பட்டு பரிபூரணமான சமத்துவத்தை நிலைநாட்டிய முஸ்லிம்கள் மகத்தானவர்கள் என்பதை நீங்கள் இங்கே உணரலாம்."

(சுவாமி விவேகானந்தர் எழுதிய The Great Teachers of the World, Pg: 133)

"மக்களாகிய உங்களிடம் வரட்டு எண்ணங்கள் தான் உள்ளது. நீங்கள் மூடநம்பிக்கையும், ஓரவஞ்சனையும் கொண்டவர்களாக இருக்கின்றீர்கள். இந்த தூதர்கள் இறைவனிடம் இருந்து வந்திருக்கக் கூடும்.

இல்லையெனில் அவர்கள் எப்படி மாபெரும் மனிதர்களாக இருந்திருக்க முடியும்?

நீங்கள் ஒவ்வொரு குறைபாட்டை மட்டும் உற்று நோக்குகின்றீர்கள். நம்மில் ஒவ்வொருவரிடமும் குறைகள் உள்ளன. குறைகள் இல்லாதவர் எவர் உள்ளார்?

யூதர்களிடம் இருக்கும் பல குறைகளை என்னால் சுட்டிக்காட்ட இயலும்.

தீயவர்கள் எப்போதும் குறைகளைத் தான் தேடிக் கொண்டிருப்பார்கள்....

ஈக்கள் அழுகியவற்றைத் தேடியே வரும்.
தேனீக்களே மலரில் உள்ள மருந்தைத் தேடிவரும்.
ஈக்களின் பாதையைத் தேர்ந்தெடுக்காதீர்கள்.
தேனீக்களின் பாதையைத் தேர்வு செய்யுங்கள்.

இதன் பிறகு முஹம்மது பல மனைவியரை திருமணம் செய்து கொண்டார். மாபெரும் மனிதர்கள் ஒவ்வொருவரும் 200 மனைவியரைக் கூட மணமுடித்துக் கொள்ளலாம். உங்களைப் போன்ற சாதாரண மனிதர்கள் ஒரு மனைவியைக் கூட மணக்க நான் அனுமதிக்க மாட்டேன். மாபெரும் ஆன்மாக்களின் பண்புகள் மர்மமானவை.

அதை நம்மால் கண்டுபிடிக்க முடியாது.
நம்மால் அவர்களை எடைபோட முடியாது.

இயேசு வேண்டுமெனில் முஹம்மதைப் பற்றி தீர்ப்பு கூறலாம். நானும், நீங்களும் யார் தீர்ப்பு கூற? நாம் சின்னக் குழந்தைகள்தான். இந்த மாபெரும் ஆன்மாக்களைப் பற்றி நாம் என்ன புரிந்து வைத்திருக்கிறோம்?

"இஸ்லாம் வெகு மக்களுக்கான தூதுச் செய்தியாக வந்தது. அதன் முதல் தூது சமத்துவம் ஆகும்... அன்பு என்ற ஒரே மார்க்கமே உண்டு. இனி இனம், நிறம் அல்லது வேறு எந்த பாகுபாடு குறித்து கேள்வி எழுப்பக்கூடாது.

அதில் சேருங்கள்!

இந்த நடைமுறைப் பண்புதான் வெற்றியை அளித்தது...
இந்த மாபெரும் தூதுச் செய்தி மிக எளிமையானதாக இருந்தது. விண்ணையும், மண்ணையும் படைத்த ஒரே கடவுளை நம்புங்கள். அவன்தான் ஏதுமில்லாதவற்றில் இருந்து உங்களைப் படைத்தான். எந்தக் கேள்வியும் எழுப்பாதீர்கள்...

(1900 மார்ச் 25 அன்று ''சான் பிரான்சிஸ்கோ பே'' பகுதியில் முஹம்மது என்ற தலைப்பில் ஆற்றிய உரையில் இருந்து)

குர்ஆனும் முஹம்மது நபியின் அருள்வாக்கு என்று பரம்பரையாகச் சொல்லப்படுகிற ஹதீஸின் பல பாகங்களும் நேராகவோ, மறைமுகமாகவோ சொல்லிக் காட்டாத விஞ்ஞானமோ, கலையின் துறையோ இல்லை.

(சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் நூற்றாண்டு விழாப் பதிப்பு எட்டாம் பாகம் பக். 353, 354)

பூரணமான சமத்துவமும், சகோதர மனப்பான்மையும் முஸ்லிம்களிடையே திகழ வேண்டும் என்று உண்மையைத் தம் வாழ்க்கை வாயிலாக முஹம்மது மெய்ப்பித்து விட்டார்.

அங்கே வேறுபாடு இல்லை;<br>
சாதி வேற்றுமை இல்லை;<br>
கொள்கை வேற்றுமை இல்லை;<br>
வர்ண வேறுபாடு இல்லை;<br>
பால் வேற்றுமை இல்லை.

எங்களுடைய தத்துவம் ஒரு சிகரம் போல் ஓங்கி நிமிர்ந்து நின்றாலும் செயல்முறையில் எங்கள் குறைபாட்டை நீங்கள் நன்கு உணர்ந்து விடுவீர்கள்.

மற்றைய இனத்தார்களைக் காட்டிலும் முஸ்லிம்கள் சிறப்புற்று இருக்கின்றார்கள்.

இனப்பற்று, வர்ணப்பற்று முதலியவற்றைப் பொருட்படுத்தாமல் அவர்கள் காட்டுகின்ற சமத்துவத்திலே தான் அவர்களுடைய சிறப்பு வீற்றிருக்கிறது.

(சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் நூற்றாண்டு விழாப் பதிப்பு இரண்டாம் பாகம் பக். 405, 406)

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள்:

“சந்தேகம் கொள்வதைப் பற்றி எச்சரிக்கையுடன் இருங்கள். ஏனெனில் சந்தேகம் தவறான தகவல்களின் அடிப்படையில் ஏற்பட்டிருக்கலாம். பிறரைத் துப்பறியாதீர்கள். மேலும் பிறரது தவறுகளை அம்பலப்படுத்தாதீர்கள்”

( ஆதார நூல்: புகாரி )

## நபிகளார் (ஸல்) அவர்களுக்கு வெற்றியைத் தந்தது வாள் அல்ல!

### - காந்தியடிகள்



‘‘இஸ்லாம் மார்க்கம் உச்ச நிலையில் இருக்கும்பொழுது அது மற்ற மதங்களிடத்தில் சகிப்புத் தன்மை காட்டாமல் இருந்ததில்லை. தவிரவும் அது முழு உலகத்தின் நன் மதிப்பையும் பெற்று சிறந்து ஓங்கி விளங்கிற்று.

மேலை நாடுகளில் இருளில் ஆழ்ந்திருந்த சமயத்தில் கீழ்நாட்டில் மிகவும் ஒளிமிக்க விண்மீனொன்று உதயமாகி உலகத்துக்கு அறிவுச் சுடரையும் ஆற்றலையும் அளித்துள்ளது.

இஸ்லாம் எப்படிப்பட்ட மார்க்கம் என்பதை அறிய, இந்துக்கள் பயபக்தியுடன் முயற்சி எடுக்க கடமைப்பட்டுள்ளனர்.

அவ்வாறு அவர்கள் முயலுவார்களேயானால் என்னைவிட அதிகம் அவர்கள் இஸ்லாத்தை நேசிப்பார்கள்.

உலக வரலாற்றில் அந்தக் காலத்தில் இஸ்லாத்துக்கு உயர்ந்த நிலையை அளித்தது வாள் பலம் அல்ல என்று எவ்வித ஐயமும் இன்றி இப்போது உணர்ந்து கொண்டேன்.

நபி பெருமகனார் அவர்களின் உறுதியான எளிய வாழ்க்கையும், தியாகமும், சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் அவர்களுக்கு இருந்து வந்த மட்டிலடங்கா ஆர்வமும் அவர்களைப் பின்பற்றியவர்களிடமும் நண்பர்களிடமும் இருந்தது.

அவர்களுக்கிருந்த அளவு கடந்த பக்தி விசுவாசமும், அவர்களின் வீரமும், மனோ உறுதியும் தங்கள் தூதிலும் ஆண்டவனிடத்திலும் அவர்களுக்கிருந்த முழுமையான நம்பிக்கையுமே, இஸ்லாத்தை உன்னதப் பதவிக்கு உயர்த்தின

அவர்களுடைய வேலைக்கு இடையூறாக நின்ற சகல தடைகளையும் நீக்கி அவர்களுக்கு எத்திசையிலும் வெற்றியைக் கொடுத்தது எது? இவ்வரிய குணங்களேயன்றி வாள் அன்று !

இறைவனுக்கு அஞ்சி நடக்க முயன்ற இலட்சோப லட்சம் மனிதர்களுள் ஒருவராய் நபிகள் நாயகம் விளங்கினார்.

ஏழையாகவே அவர் மரித்தார்.
தமது சடலம் புதைக்கப்படும் இடத்தில் மாபெரும் மண்டபம் எழுப்பப்பட வேண்டும் என் அவர் விரும்பியதே இல்லை.
தமக்கு கடன் தந்தவர்கள் ஒருவரையேனும் அவர் தமது மரணப் படுக்கையிலும் மறந்ததில்லை.

இஸ்லாத்தைப் பற்றி பல நூல்களைப் பக்தியுடன் நான் படித்திருக்கிறேன்.

ஒரு தடவைக்கு மேல் பல தடவை நான் குர்ஆனையும் படித்துப் பார்த்திருக்கிறேன்.

'சத்தியமும் அகிம்சையும்' திருக்குர்ஆனால் போதிக்கப்படுகின்றன, என்ற உண்மையை நான் காண்கின்ற போது மெத்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

நபிகள் நாயகம், பெரிய தீர்க்கதரிசி.
அவர்கள் அன்று பட்ட துன்பங்களை நான் படித்த போது, கண்ணீர் வடித்தேன்.

நீங்கள் இஸ்லாமியக் கலீபாக்களான அபுபக்கர், உமர் ஆகியோரின் ஆட்சி முறையைப் பின்பற்றி நம் நாட்டு ஆட்சியை அமைத்துக் கொள்ளுங்கள்."

(யங் இந்தியா - 24 செப்டம்பர், 1924; ஹரிஜன் - 27 ஜூலை, 1937 ஆகிய இதழ்களில் காந்தியடிகள் எழுதியது.)

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள்:
"இறைவனையும் இறைத்தூதரையும் நேசிக்க வேண்டும் என்பதில் உண்மையுடன இருக்க விரும்பக் கூடியவர் அல்லது இறைவனும் இறைத்தூதரும் தன்னை நேசிக்க வேண்டும் என்று ஆவல் உள்ளவர் எப்பொழுதும் உண்மையையே பேசட்டும். அடைக்கலமாக ஒப்படைக்கப்பட்டவற்றை பேணி தனது வாக்குதியை நிறைவேற்றட்டும். அண்டை வீட்டாருடன் நல்லுறவு பேணட்டும்"

அறிவிப்பாளர்: அப்துர் ரஹ்மான் இப்னு அபூகுராத் (ரலி)
ஆதார நூல்: பைஹகி

**நபிகள் (ஸல்) அவர்களின்**
**சமரசத் தத்துவத்தை**
**இவ்வுலக மக்கள் அனைவர் மீதும்**
**சமமாக நிலவச் செய்வானாக!**
**- அன்னிபெசன்ட்**



''பெண்கள் பற்றி திருக்குர்ஆனில் காணப்படும் சட்ட திட்டங்கள் நீதியானவையாகவும், பரந்த நோக்கம் கொண்டவையாகவும் இருக்கின்றன.

கடந்த இருபது ஆண்டு காலமாகத்தான் இங்கிலாந்தில் பெண்களுக்கு சொத்துரிமை தரப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்லாமோ காலாகாலமாக அவ்வுரிமையைப் பெண்களுக்கு அளித்து வருகின்றது.

பெண்களுக்கு ஆன்மா இல்லையென்பதாக இஸ்லாம் போதிக்கிறது என்று பொறுப்பற்றத்தனமாக விவாதிப்பது, அதன் மீது பெரும் பழி கற்பிப்பதாக இருக்கும். (1930 சொற்பொழிவு)

"எனது இதயத்துக்குள்ளே பக்தியையும் விசுவாசத்தையும், நன்மதிப்பையும் பதியும்படி செய்த முஹம்மது நபி (ஸல்) அவர்களது மேன்மைகளில் முதன்மையானது எது ?

மிகவும் மூர்க்கர்களாயிருந்த அக்காலத்து அரபியர்கள்
ஒருமித்த மனதினராய் அந்த தீர்க்கதரிசியை
'அல்அமீன்' (நம்பிக்கைக்குரியவர்)
என்று போற்றியதாகும்!

சுருங்கச் சொல்ல வேண்டுமெனில், இவ்வாறே இந்து மதத்தைச் சார்ந்துள்ள பல பெரியோர்களும், பல மேதைகளும், பல தலைவர்களும், தலைவிகளும் நன்னோக்கத்துடனேயே முஹம்மது நபி (ஸல்) அவர்களை மிகவும் போற்றிக் கூறியுள்ளார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

மேலும் நான் இஸ்லாம் மதத்தின் மீதும் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) மீதும் கொண்டிருக்கும் நல்லன்பைப் பற்றியும் எனது இந்து சகோதரர்களில் பலர் நன்னோக்கம் கொண்டிருப்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியுறுகிறேன்.

இத்தகைய சமாதான நல்லெண்ணம் மற்ற எல்லா சகோதரர்களுடைய ஆன்மாக்களுக்குள்ளும் நிலவி நிற்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

மேலும் ஒரே இறைவனான ஆண்டவன் அந்த முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீது என்றைக்கும் சாந்தியும் சமாதானமும் அருள்வானாக. அவரது சமரசத் தத்துவத்தை இவ்வுலக மக்கள் அனைவர் மீதும் சமமாக நிலவச் செய்வானாக. அதன் மூலமாய்ச் சகோதரத்துவம், சமத்துவம் ஆகியவற்றை உண்டாக்குவானாக.
அந்த உலக உத்தமர் (ஸல்) பொருட்டாக யாவர்க்கும் நல்லருள் புரிவானாக" (பிரம்ம ஞான சபை சொற்பொழிவு)

"ஒருதார மணத்தைப் போதிக்கும் மதத்தைவிட,
இஸ்லாம்தான் பெண்ணுக்கு மேலான
பாதுகாப்பை அளிக்கிறது.

பெண்கள் பற்றித் திருக்குர்ஆனில்
காணப்படும் சட்ட திட்டங்கள்,
நீதியானவையாவும் பரந்த நோக்கம்
கொண்டவையாகவும் இருக்கின்றன.

(அயர்லாந்தில் பிறந்து இந்தியாவிற்கு வந்து விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட வீராங்கனை அன்னிபெசன்ட் அம்மையார்அவர்களின் பிரம்மா ஞான சபைச் சொற்பொழிவிலிருந்து)

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"எவரொருவர் மூன்று மகள்களையோ அல்லது மூன்று சகோதரிகளையோ நன்றாக கல்வியளித்து பரிவுடன் நடத்தி நன்முறையில் வளர்க்கிறாரோ அவருக்கு சுவர்க்கத்தை இறைவன் வாக்களிக்கிறான்.
ஒருவர் வினவினார்: இரண்டு பெண்களே உள்ளவர்களுக்கும் இந்த பேறு கிட்டுமா? இறைத்தூதர், "ஆம் இரண்டு பெண்கள் இருந்தாலும் பொருந்தும்" என்றார்கள்
மக்கள் "ஒரே ஒரு பெண் தான் உண்டு என்றால் என்ன செய்வது? என்று கேட்டார்கள். இறைத்தூதர் "ஆம் ஒரேயொரு பெண்ணை நல்லபடி வளர்த்தாலும் சொர்க்கம் வாக்களிக்கப்படுகிறது" என்றார்கள்

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி) ஆதார நூல்: ஷரஹ் அல் சுன்னா

அண்ணல் நபி (ஸல்) சொன்னார்கள்:

"பெண் சிசுவை கொலை செய்யாமல் பாரபட்சமில்லாமல் பராமரித்து வளர்த்தால் இறைவன் அவருக்கு சுவரக்கத்தில் இடம் அளிப்பான்."

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி) ஆதார நூல்: அபூதாவூது

## நபிகளார் (ஸல்) மனித சமுதாயத்தின் எல்லா வாழ்வுத் துறைகள் பற்றியும் உயர்ந்த தத்துவங்களைச் சொல்லி விட்டார்

**- ஈ.வெ.ரா. பெரியார்**



நபி அவர்கள், மக்கள் சமுதாயத்திற்கு ஒரே கடவுள்; மக்கள் சமுதாயம் ஒரே குலம்; உருவ வழிபாட்டுக்கு மக்கள் ஆளாகக் கூடாது என்பதாகச் சொல்லியிருக்கிறார்.

கடைசியாக இன்னொன்றையும் சொன்னார். ''நான் தான் கடைசி நபி எனக்குப் பின்னால் நபிகள் (தீர்க்கதரிசிகள்) தோன்ற மாட்டார்கள்'' என்று.

அதைப் பற்றி நீங்கள் எப்படிக் கருதினாலும் என்ன முடிவுக்கு வந்தாலும் இன்றைய வரையிலே அவருக்குப் பின்னால் இந்தத் துறைகளில் அவர் சொன்ன கொள்கை, கருத்துக்களை விட மேலானதாகச் சொல்வதற்கு எவரும் தோன்றவில்லை.

அந்த அளவிற்கு மனித சமுதாயத்தின் எல்லா வாழ்வுத் துறைத் தன்மைகள் பற்றியும் உயர்ந்த தத்துவங்கள் கொண்ட கோட்பாடுகளைச் சொல்லி விட்டார் நபி அவர்கள்.''

(சென்னைச் சொற்பொழிவு, 20.12.1953)

நம்மிலும் பல பெரியார்கள் - 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது போலவெல்லாம் சொல்லிப் பார்த்தார்கள்.
ஆனால் அவை என்றும் ஏட்டளவில்
இருக்கின்றனவே தவிர நடப்பில் இல்லை.

ஆனால் முஸ்லிம் சமுதாயத்திலே நடப்பிலே ஒரே ஆண்டவன் வழிபாடும், மக்களுக்குள் பிறவியில் பேதமற்ற நிலைமையும் இருந்து வருகின்றன.

தீண்டாமை வியாதி மிகப் பெரியது.
இது புற்று, தொழு நோய் போன்றது.
வெகு நாளைய நோய்.
இந்த நோய்க்கு ஒரே மருந்து உண்டு
அது இஸ்லாம் தான்.

இதைத் தவிர வேறு மருந்து இல்லை.
இது இல்லாவிட்டால் வேதனைப்பட வேண்டியதுதான்.

நோய் தீர்ந்து எழுந்து நடக்க இன்றைய நிலையில்
இஸ்லாம் மருந்துதான்.

இதுதான் நாடு கொடுக்கும், வீரம் கொடுக்கும்,
நிமிர்ந்து நடக்கச் செய்யும் மருந்தாகும்.

(இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து,
என்ற பெயரில் குடியரசு பதிப்பகத்தால் இந்த உரை சிறு நூலாக
1947ல் வெளியிடப்பட்டது.
ஆனைமுத்து தொகுப்பிலும் காணலாம்.)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் சூரிய கிரகணம் ஏற்பட்டது. அச்சமயத்தில் அவர்களுடைய பச்சிளம் குழந்தை இப்ராஹீம் காலமானார். நபிகளின் மகன் இறந்ததனால் தான் கிரகணம் ஏற்பட்டது என்று மக்கள் பேசத் தொடங்கினர்.

அவர்களை நோக்கி நபிகள் நாயகம் (ஸல்) “சூரியனும் சந்திரனும் இறைவனின் இரண்டு சான்றுகள். யாருடைய பிறப்போ மரணமோ கிரகணத்திற்குக் காரணமல்ல” என்று கூறினார்கள்.

ஆதார நூல்: புகாரி, முஸ்லிம்

நபிகள் நாயகம் (ஸல்) சொன்னார்கள்:

“சகுனம் பார்ப்பவர்கள் என்னைச் சார்ந்தவர்கள் அல்லர்”

ஆதார நூல்: தப்ரானி

பறவைகளைப் பறக்கவிட்டு அதனால் சகுனம் பார்ப்பது, கல்லெறிந்து குறி கேட்பது ஆகியவை இறைவனன்றி மற்றவற்றை வணங்குவதற்கு இணையான செயலாகும்

ஆதார நூல்: அபுதாவூத்

## நபிகளார் (ஸல்) அவர்களின் வெற்றிக்கு காரணம் என்ன?

### - ஜவஹர்லால் நேரு



"முஹம்மது நபியின் வெற்றிக்கு முதலாவது காரணம் அவர்கள் கொண்டிருந்த உறுதியும் ஊக்கமும் (இத்தகைய உறுதி அன்றைய சூழ்நிலையில் ஏற்படுவது எளிதன்று)

இரண்டாவது காரணம் இஸ்லாம் போதிக்கும் சமத்துவமும், சகோதரத்துவமும் ஆகும்."

இஸ்லாம் சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் வலியுறுத்தியது மக்களுக்கிடையே ஒரு வகையான ஜனநாயகத்தை நிலை நாட்டியது.

இஸ்லாத்தின் இந்த கொள்கைகள் அரபுலகில் மட்டுமல்ல, எங்கேயெல்லாம் முஸ்லிம்கள் சென்றார்களோ அங்குள்ள முஸ்லிம்களையும் அது கவர்ந்தது."

(Glimpses of World History - பக்கம் 141 -145)

அண்ணல் நபி (ஸல்) சொன்னார்கள்:

"தாம் விரும்பியதை தமது சகோதரருக்கும் விரும்பாத வரை உங்களில் எவரும் முழுமையான இறை நம்பிக்கைக் கொண்டவராக மாட்டார்"

அறிவிப்பாளர்: அனஸ்(ரலி)
ஆதாரநூல்: புகாரி முஸ்லிம்

**நபிகளார் (ஸல்)**
**மனிதனை**
**மனிதனாக வாழ்ச் செய்தவர்!**

**- டாக்டர் அம்பேத்கர்**



**பிறப்பால் உயர்வு-தாழ்வு நீக்கி மனிதனை மனிதனாக வாழச் செய்து, சமுதாயக் கூட்டுறவு என்ற அடிப்படையின் மீது மக்களை வாழ்விக்க ஒரு நிரந்தர நெறிமுறையை வகுத்துத் தந்த வீரர் முஹம்மதைப் புகழ என்னிடம் வார்த்தைகள் போதாது.**

அண்ணல் நபி (ஸல்) சொன்னார்கள்:

“கறுப்பரை விட வெள்ளையரோ வெள்ளையரை விட கறுப்பரோ சிறந்தவர் அல்லர். அரபியரை விட அரபி அல்லாதவரோ அரபி அல்லாதவரை விட அரபியரோ சிறந்தவர் அல்லர். இறையச்சம் உடையரே உங்களில் சிறந்தவர்”

ஆதாரம்: இறுதி ஹஜ்ஜின் போது ஆற்றிய உரையிலிருந்து

“கருமை நிற மூதாட்டி ஒருவர் நபிப் பள்ளிவாசலை தினமும் துப்புரவு செய்வது வழக்கம். ஒரு நாள் அவர் இல்லாததைக் கண்ட நபியவர்கள் தோழர்களிடம் விசாரித்தார்கள். அவர் இறந்து விட்டார் என்று தோழர்கள் கூறினார்கள். இதை ஏன் தெரிவிக்கவில்லை என நபியவர்கள் கேட்டார்கள். பிறகு அவருடைய மண்ணறைக்குத் தன்னை அழைத்துச் செல்ல நபியவர்கள் சொன்னார்கள். அவர்களுடன் அந்த மூதாட்டியின் மண்ணறைக்குச் சென்று அந்த மூதாட்டிக்காகப் பிரார்த்தனைச் செய்தார்கள். மண்ணறை இருட்டாக இருக்கும். அவர்களுக்காக நான் செய்த பிரார்த்தனையால் அல்லாஹ் நிச்சயமாக அதனை அவர்களுக்கு ஒளி மிக்கதாக ஆக்குகிறான் என்றார்கள்”

அறிவிப்பாளர்: அபுஹுரைரா (ரலி)     ஆதார நூல்: முஸ்லிம்

## நபிகளாரின் அறிவுரை நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது!

## - ஆச்சாரியா வினோபா



“கடைத் தெருக்களில் அதிகம் அலையாதீர்’ என்பது நபி பெருமானாரின் வாக்கு. இன்றைய கடைத்தெருக்களில் காணப்படும் மதுபான அலங்காரக் கடைகளில் கவர்ச்சிகளைப் பார்க்கும்பொழுதுதான் பெருமானாரின் அறிவுரை நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது.” (சர்வோதயப் பிரசுரம்)

அண்ணல் நபி (ஸல்) சொன்னார்கள்:


“போதைத் தரும் அனைத்து பானங்களையும் இறைவன் சபிக்கின்றான். யார் அத்தகைய பானங்களை குடிக்கின்றாரோ அதனை பரிமாறுகிறாரோ விற்பனை செய்கிறாரோ வாங்குகிறாரோ தயாரிக்கிறாரோ அதனை தயாரித்து தருமாறு கேட்கிறாரோ அதனை தருகிறாரோ அதனை தருமாறு கேட்கிறாரோ எடுத்துக் கொடுக்கிறாரோ ஆகிய அனைவரையும் இறைவன் சபிக்கின்றான்"

ஆதார நூல்: அபுதாவூத்

“எந்தப் பொருளை அதிக அளவில் உட்கொண்டால் போதை உண்டாகுமோ அதே பொருளை குறைந்த அளவில் உட்கொள்வதும் தடை செய்யப்படுகிறது” ஆதார நூல்: அஹ்மது, அபுதாவூத்

## வெற்றி வேளையில் நபிகளார் காட்டிய பெருந்தன்மை ஈடு இணையற்றது!

## - பிலிப் கே ஹிட்டி



‘‘முஹம்மது நபி மக்கா நகரைக் கைப்பற்றிய போது அங்கிருந்த மக்கள் பெரியதொரு சிறப்பான பெருந் தன்மையுடனேயே நடத்தப்பட்டார்கள். பண்டை வரலாறுகளில் காணக்கிடக்கும் வேறெந்த தலைவர் வெற்றி பெற்று வீரத்துடன் புகுந்த நகரத்திலும் நடைபெற்ற காட்சி இதற்கு நிகரானதாக இல்லை’’

(அரபுகளின் வரலாறு என்ற நூலில்)


அண்ணல் நபி (ஸல்) சொன்னார்கள்:

“யார் மக்களுக்குக் கருணை காட்டுவதில்லையோ அவருக்கு அல்லாஹ்வும் கருணை காட்டுவதில்லை”

ஆதார நூல் புகாரி, முஸ்லிம்

**வாளேந்தி வன்சமர் புரிந்து சாதிக்க**
**முடியாத சாதனைகளைக் கூட**
**நபிகளின் இன்சொல்லும்**
**புன்முறுவலும் சாதித்தது!**

**- பேரறிஞர் அண்ணா**



''ஏக தெய்வக் கொள்கையை - ஒன்றே குலம், ஒருவனே தேவன் எனும் உண்மைத் தாத்பரியத்தை, மக்களை ஏற்கச் செய்ய எவ்வளவோ பிரச்சாரம் தொடுத்தும், முழுப் பயனும் எட்ட முடியாமல் உள்ள வெதும்பும் நம்முடைய பிரச்சாரத்தையும், 1400 ஆண்டுகளுக்கு முன்பு, எவ்வித நவயுகப் பிரச்சார சாதனமும் இல்லாத அந்த நாட்களில், திரும்பும் திசைதோறும் கடவுளின் சிலை வடித்து, தினமொரு இறைவனை உற்பத்தி செய்த அறிவாற்றலற்ற அந்த மக்களை, நபிகள் நாயகத்தின் 23 வருடப் பிரச்சார பலம், எத்துணை வெற்றிக்கு இழுத்து வந்து, ''ஒரே இறை, ஒரே மறை'' என்ற கருத்தை, உள்ளத்தால் ஒத்துக் கொள்ளச் செய்து, அதுவும் உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவி, பண்புடன் வாழச் செய்திருக்கிறது என்றால் - அந்த மனிதப் புனிதரின் நாவன்மைக்கு இருந்த நல்ல மதிப்பீட்டை, மகத்துவத்தை எண்ணிப் பூரித்து நன்னயத்திற்கு துணை போக வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இத்துணை மகத்துவம் அந்த மாநபிக்கு இருக்கக் காரணமே,
அந்த பெருமகன் தன் உயிரினும் மேலாகக்
கட்டிக் காத்து வந்த பொறுமையும்,
சொல்லும் செயலும் இணைந்த வாழ்வும்,
நடைமுறை வாழ்க்கைக்கேற்ற நல் அமைப்புமாகும்.

நபிகள் நாயகத்தின் வாழ்வும்,
வாக்கும் நிரம்பிய ஹதீதும் (நபிமொழி தொகுப்பு),
இஸ்லாத்தின் இணையற்ற இலட்சியப் பொக்கிஷமான
இறைமறை திருக்குர்ஆனும்,
மனிதன் அன்றாட வாழ்வில்
கடைப்பிடிக்க முடியாத ஒன்றைக்
கடமையாக்க முனையவில்லை.
நடைமுறை வழியில் கணிசமாக கடைப்பிடிக்க வலியுறுத்தியது.

இது இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு கிடைத்த
மிகப் பெரிய தூண்டுகோலாகும்.

இஸ்லாத்தில் நான் எடுத்துக் கொண்டவைகளுள் மிக முக்கியானது
பொறுமை.
அந்தப் பொறுமையின் உரிமையை நான் மிகப் பெருமையாக
அனுபவித்து வருகிறேன்.

வாய்மையில் வளர்க்கும் , மனத்தூய்மையில் சிறக்கும்
பொறுமை ஒன்றில்தான்
உலகம் அளப்பரிய சாதனைகளைக் காண முடிந்தது.

அந்த சாதனைகள் இஸ்லாமிய வரலாறெங்கும்
வளர்ந்து நிற்பதையும்
நம்மால் பார்க்க முடிகின்றது.

வாளேந்தி வன்சமர் புரிந்து சாதிக்க முடியாத
சாதனைகளைக் கூட,
நபிகள் பிரானின்
இன்சொல்லும் புன்முறுவலும்,
தனக்கே உரிய தனித்த
ஆயுதமான பொறுமையினாலும்,
வெற்றி கொண்டு இருக்கிற சக்தி
அண்ணலின் பால்
எனக்கு அளப்பரிய
பக்தியை உண்டாக்கி விட்டது.

(21.3.1966 அன்று அபிவிருத்தீஸ்வரம் பள்ளிவாசலில்
நடைபெற்ற வரவேற்பின் போது பேரறிஞர் அண்ணா அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து)

“கண்மூடி பழக்கங்களை மண்டச் செய்து
காட்டுமிராண்டித் தன்மையினரை
உயர்ந்த சமுதாயமாய் உருவாக்கி,
நெருக்கடியான வேளைகளிலும்
இலட்சியங்களை நிறைவேற்றத் தவறாத
கடமை வீரர் நபிகள் நாயகம் அவர்கள்.”

(பேரறிஞர் அண்ணாவின் கட்டுரைத் தொகுப்பிலிருந்து)

அண்ணல் நபி (ஸல்) சொன்னார்கள்:
“எந்த மனிதர் பொறுமையாயிருக்க முயல்கின்றாரோ அவருக்கு அல்லாஹ்
பொறுமையை அளிப்பான். பொறுமையை விடச் சிறந்ததும் பல
நன்மைகளைக் குவிக்க கூடியதுமான கொடை வேறெதுவுமில்லை”
அறிவிப்பாளர்: அபூஸயீத் குத்ரி (ரலி) நூல்: புகாரி, முஸ்லிம்

**இன்றைய உலகம்**
**வேண்டி நிற்பதை**
**அன்றே உபதேசித்தவர்**
**நபிகள் நாயகம்!**

**- கவிக்குயில் சரோஜினி நாயுடு**



‘‘ஜனநாயகக் கொள்கையை உலகில் முதன் முதலாக கற்பித்ததும் நடைமுறைப்படுத்திக் காட்டியதும் இஸ்லாம் மதம் ஒன்று தான்.

ஏனெனில் பள்ளிவாசலின் கும்பத்திலிருந்து அழைப்பு (பாங்கு ஒலி) கேட்டவுடனே, வணக்கத்துக்குச் செல்லும் அத்தனை பேரும் ஒரு கூட்டமாய் ஒன்று சேர்ந்து, ஒருங்கே குழுமி நாள்தோறும் ஐந்து வேளைகளின் போதும், இஸ்லாமிய ஜனநாயகத் தத்துவம் இப்படிப்பட்டது என்பதை நிரூபித்துக் காட்டுகிறார்கள்.

அத்தருணத்தில் அரசனும் ஆண்டியும் தோளோடு தோள் தழுவ நின்று கொண்டு ஆண்டவனே மகாப் பெரியவன் என்று வெளிப்படை ஆக்குகிறார்கள்.

ஒரு மனிதனை இன்னொரு மனிதனுடைய சகோதரனாக இயற்கையிலேயே செய்து வருகின்ற இஸ்லாத்தின் பிளக்க முடியாத ஒற்றுமையைக் கண்டு நான் மீண்டும் மீண்டும் மகிழ்வது உண்டு.

உலக மதங்களிலெல்லாம் இஸ்லாம் வயதில் இளையது.
ஆனால் பெருமை வாய்ந்தது என்று நான் வலியுறுத்திக் கூறுகின்றேன்.

இம்மாதிரி நான் சொல்வதால் நான் என் மதத்தையோ, அல்லது கிறிஸ்த்தவ, பௌத்த மதங்களையோ பழிக்கவில்லை.

நவீன உலகில் உண்மை ஜனநாயக அரசியலை இஸ்லாம் நிலைநாட்டிற்று என்னும் ஒரே அம்சத்தில் தான் இம்மதம் ஏனைய மதங்களைக் காட்டிலும் உயர்ந்தது என கூறுகிறேன்.

உலகம் இன்று எதை வேண்டி நிற்கின்றது?

உலக மக்களின் தற்போதைய வேண்டுதல் ஜனநாயகத்தையும், சகோதரத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட புதியதொரு சக அமைப்பைப் படைக்க வேண்டும் என்பது தான்.

இந்த உயர்நிலை
இலட்சியத்தை,
தேவையை,
பாலைவனத்தின் தீர்க்கதரிசி,
அண்ணல் நபி அவர்கள்
பதிமூன்று நூற்றாண்டுகளுக்கு
முன்னரே உபதேசித்து அருளினார்.

(விடுதலைப் போராட்ட வீராங்கனை சரோஜினி நாயுடு அவர்களின் கட்டுரைத் தொகுப்புகளிலிருந்து)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

இறைவனிடம் நன்மையை வேண்டிப் பிரார்த்தனை செய்தாரோ அவர் ஏமாற்றம் அடையமாட்டார். எவர் முக்கிய பணிகளில் இறங்குவதற்கு முன்பு ஆலோசனை கலந்துக் கொண்டாரோ அவர் துன்ப துயரத்திற்கு ஆளாக மாட்டார். மேலும் எவர் நடுநிலையான போக்கை மேற்கொண்டாரோ அவர் வறுமையில் சிக்க மாட்டார்

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) ஆதார நூல்: அல் முஜமுஸ் ஸகீர்

அண்ணல் நபி (ஸல்) சொன்னார்கள்:

கூட்டமைப்புடன் இணைந்து வாழுங்கள். இல்லையெனில் மந்தையை விட்டுத் தனியே ஒதுங்கிப் போய்விட்ட ஆட்டின் நிலைமைத்தான் உங்களுக்கும் ஏற்படும். ஏனெனில் தனியே செல்லும் ஆட்டைத் தான் ஒநாய் விழுங்குகின்றது.

அறிவிப்பாளர்: அபூதர்தா (ரலி) ஆதார நூல் அபூதாவூத்

**கட்டாய மதமாற்றத்தை
முஹம்மது நபிகள்
போன்ற சிந்தனையாளர்கள்
ஊக்குவித்திருக்க
முடியாது !**

**- டாக்டர். சர்வபள்ளி
ராதாகிருஷ்ணன்**



.

‘எல்லா மதங்களைப் போல் உண்மையும்
ஒழுக்கத்தையும் வலியுறுத்தும் மார்க்கமாக
இஸ்லாம் விளங்குகின்றது.

முஹம்மது நபிகளைப் பொறுத்தவரையில்,
மதம் என்பது உண்மையை அறிந்து
அதன் வழியில் வாழ்வது என்பதாகவே இருந்தது.

முன்னேறிச் செல்லும் மனித குலத்தின் மனசாட்சிக்கு
முஹம்மது நபி அவர்கள் கட்டுப்பாடுகள்
எதனையும் விதிக்கவில்லை.

மனிதர்களின் சிந்தனை கண்மூடித்தனமாக,
அதிகாரத்திற்கு அடிபணிய வேண்டும்
என்ற நிலையை
இறைத்தூதர் ஏற்படுத்தவில்லை.

உலகின் மனிதாபிமானமற்ற நடைமுறைகளைத்
நியாயப்படுத்தும் நிலையை,
அறிவாற்றலின் அடிப்படையில்
பின்பற்றப்படும் இஸ்லாத்தில் இல்லை.

கட்டாய மதமாற்றத்தை முஹம்மது நபிகள்
போன்ற சிந்தனையாளர் ஊக்குவித்திருக்க முடியாது.

தனது நம்பிக்கைகளை மாற்றிக் கொள்ளும்படி மனிதர்களை நாம் நிர்பந்திக்க முடியாது.

பின்வரும் திருக்குர்ஆன் வசனங்கள் இதற்கு ஆதாரமாக அமைகின்றது.

மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்பந்தமுமில்லை.
(திருக்குர்ஆன் 2-256)

உங்களுக்கு உங்களுடைய மார்க்கம்;
எனக்கு என்னுடைய மார்க்கம்.''
(திருக்குர்ஆன் 109:6)

(டாக்டர். சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் எழுதிய
The Heart of Hindustan என்ற நூலில் இருந்து)

நபிகள் நாயகத்தின் தோழர் அபூபக்கர் (ரலி) அவர்களின் மகள் அஸ்மாவின் தாயார் இஸ்லாத்தை ஏற்காமல் இருந்த நிலையில் மக்காவிலிருந்து மதினாவிலிருக்கும் தனது மகள் அஸ்மா (ரலி)அவர்களைக் காண வருகை தந்தார். அப்பொழுது அஸ்மா (ரலி) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ‘‘எனது தாயார் என்னிடத்தில் ஏதேனும் எதிர்பார்த்தவராக என்னைக் காண வந்திருக்கிறார். அவர்களோடு அன்புடன் நடந்து கொள்ளட்டுமா?‘‘ என்று விளக்கம் கேட்டார்கள்.நபிகள் நாயகம் (ஸல்) “ஆம்! அவரிடம் அன்புடன் நடந்து கொள்” என்று பதிலளித்தார்கள்

அறிவிப்பாளர்: அஸ்மா (ரலி) ஆதார நூல்: புகாரி, முஸ்லிம்


அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்

பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்கப்பட்ட முஸ்லிமல்லாத ஒருவரை கொலை செய்பவர் சுவர்க்கத்தின் வாடையைக் கூட - அதன் வாடை நாற்பது ஆண்டு கால தொலைவிற்கு பரவியிருப்பினும் -நுகர முடியாது

அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரலி) ஆதார நூல்: புகாரி

## மனித சமுதாயத்தின்
## பாதுகாவலர்
## நபிகளார் (ஸல்) !

**- ஜார்ஜ் பெர்னாட்ஷா**



“ நெப்போலியனைப் போல் நான் இஸ்லாம் மார்க்கத்தை விரும்புகிறேன்.

ஆங்கிலேய சாம்ராஜ்ஜியம் முழுவதும் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் இஸ்லாம் மதத்தை ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

முஹம்மதின் நடத்தை எனக்குப் பிடித்திருக்கின்றது. மனித வாழ்க்கையைப் பற்றிய அவருடைய கொள்கைகளை பெரும்பாலும் நான் ஆதரிக்கிறேன்.

(Getting Married என்ற தலைப்பில் 1929ல் வெளியான ஒரு நூலில் இருந்து)

“நான் முஹம்மதுடைய மார்க்கத்தை எப்பொழுதும் உன்னத நோக்குடனேயே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஏனெனில் அதனுடைய அற்புதமான உயிர்ப்புச் சக்தியைப் பற்றி நான் வியப்புற்றிருக்கிறேன்.

அந்தந்த காலத்துக்கு ஏற்ற முறையில் ஒத்துவரக்கூடியபடி தன்னைத்தானே அமைத்துக் கொள்ளக்கூடிய மார்க்கம் இஸ்லாம்.

உலகின் மாறுதல்களுக்கும் ஈடு கொடுக்கும் ஒப்பில்லாக் கொள்கையுடையது இஸ்லாம்.

என்னைப் போன்ற பெரிய மனிதர்களின்
புத்திக் கூர்மைக்கு உலகம் உயர்ந்த மதிப்பு
வைக்க வேண்டுமென்பதில்
சற்றும் ஐயமில்லை.

முஹம்மதின் மார்க்கமானது,
நாளை ஐரோப்பா முழுமையுமே
ஏற்றுக் கொள்ளக்கூடிய
மார்க்கமாக ஆகிவிடுமென்று
முன்னொரு முறை கூறியிருந்தேன்.

காரணம்
நான் அந்த அற்புத மனிதரைப் பற்றி
நன்றாய்ப் படித்து உணர்ந்திருக்கிறேன்.
ஆனால், என் எண்ணம்
அவர் கிறிஸ்துவிற்கு எதிரி
என்பதற்கு நெடுந்தூரத்திற்கப்பால்
போய்விட்டது.

அவரை மனித சமுதாயத்தின்
பாதுகாவலர், தேற்றரவாளர்
என்றே கூற வேண்டும்.

அவரைப் போன்று ஒரு மனிதர் உலகத்தின் தலைவர் பதவியை ஏற்றுக் கொள்வதாய் இருந்தால், உலகத்தின் பிரச்சனைகள் தீர்ந்து விடும்.

தற்போது உலகம் பெரிதும் கோரி நிற்கும்
சாந்தியையும், சமாதானத்தையும்
கொண்டு வரக்கூடிய முறையில்
தீர்த்து வைப்பதில்,
அவர் வெற்றி பெற்று விடுவாரென்று
நம்புகிறேன்.


(The Genuine Islam என்ற நூலில் இருந்து)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

முஸ்லிமல்லாத குடிமகன் ஒருவனுக்கு ஒரு முஸ்லிம் அநீதி இழைத்துவிட்டாலோ-அவனது உரிமையைப் பறித்ததாலோ-அவனது சக்திக்கு மீறிய சுமைகளை அவன் மீது சுமத்தினாலோ-அவனது பொருள் எதையேனும் பலவந்தமாக எடுத்துக் கொண்டாலோ நான் மறுமை நாளில் இறைவனின் நீதிமன்றத்தில் அந்த முஸ்லிமுக்கு எதிராகத் தொடுக்கப்படும் வழக்கில் அந்த முஸ்லிமல்லாத குடிமகனின் வழக்கறிஞராக வாதாடுவேன்.

ஆதார நூல்: அபூதாவூத்

## நபிகளாரின் வாழ்வு
## ஒரு
## வெள்ளிடை மலை !
### - ரெவரெண்ட் பாஸ்வர்த் ஸ்மித்



"திருக்குர்ஆன் பரிசுத்தமான நடையையும், ஞானத்தையும், சத்தியத்தையும் அற்புதமாக்கிக் கொண்டது.

இதை ஒரு உறுதியான மாபெரும் அற்புதம் எனலாம்.

ஏனெனில் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்கவில்லை.

அவர் வாய்மூலம் வெளிப்பட்ட திருக்குர்ஆன்
பெரிய சட்ட நூலாகவும்,
பொதுவழிப் பாராட்டுக்குரியதாகவும்,
மானிட வர்க்கத்தின்
ஆறிலொரு பங்கு மக்களின் வாழ்க்கைக்கு
வழிகாட்டக் கூடியதாகவும் அமைந்துவிட்டது.

எக்காலத்துக்கும், எந்த அரசுக்கும் எப்போதும்
பொருந்தக்கூடிய நூல் திருக்குர்ஆன் ஒன்றே.

குறைஷிகளால் அனுப்பப்பட்ட அரசு தூதர் ஒருவர் மதீனாவிற்குச் சென்று திரும்புகிறார். திரும்பி வந்த அந்த தூதர் குறைஷிகளிடம் கூறினார்:
"பாரசீக மன்னர்களும் கிரேக்க நாட்டு வீரர்களும் தங்களுடைய சிம்மாசனங்களில் வீற்றிருந்து ஆட்சி செலுத்துவதைப் பார்த்திருக்கிறேன்.
ஆனால் முஹம்மதைப் போல் தமக்கு நிகரான மனிதர்களை ஆட்சி புரியும் அதிசயத்தை நான் கண்டதில்லை.
ஒரு நிலையான சேனையில்லை; மெய்க்காவலர் எவருமில்லை; ஒரு குறிப்பிட்ட வரியுமில்லை.
இந்த நிலையில் ஒரு தெய்வீக ஆட்சி நடத்தினார் என்றால் அவர் தாம் முஹம்மது (ஸல்). ஏனெனில் ஆயுதங்கள் ஏதுமின்றி எல்லா அதிகாரங்களையும் அவர் பெற்றிருந்தார்."

இவரது வாழ்க்கையில் ஒவ்வொரு நிகழ்ச்சியும்
வெள்ளிடை மலை போல் காட்சியளிக்கிறது.
இதில் எவ்வித இரகசியமும் கிடையாது.
எவரும் ஏமாந்து போக முடியாது.
எவரையும் ஏமாற்றவும் முடியாது.

இங்கு ஒரே பகலாக இருக்கிறது.
அதன் வெளிச்சம் ஒவ்வொரு
பொருளின் மீதும் வீசுகிறது.
அந்த வெளிச்சத்தில் இருந்து
எந்த ஒன்றும் மறைய இடமில்லை.

(Mohammed and Mohammedism என்ற நூலில்)


ஒரு முறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடந்து சென்று கொண்டிருக்கும் போது அங்கே ஒரு பெண் மண்ணறை அருகே உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள்.
அவளிடம் நபியவர்கள் "அல்லாஹ்வுக்கு அஞ்சி பொறுமையாய் இரு" என்று கூறினார்கள்.
அதற்கு அந்தப் பெண் "என்னிடம் எதுவும் கூற வேண்டாம் செனறு கொண்டிரு. எனது துன்பம் உனக்கு ஏற்படவில்லை" என்று கூறினாள்
தனக்கு அறிவுரை கூறியவர் நபிகளார் தாம், என்று அப்பெண் அறிந்திருக்கவில்லை. பிறகு "இவர்கள் தாம் நபி (ஸல்) அவர்களாவார், என அப்பெண்ணிடம் கூறப்பட்டது.
உடனே அந்த் பெண் நபி (ஸல்) அவர்களின் வீட்டிற்கு வந்தாள். அங்கு மெய்க்காப்பாளர்கள் யாரும் இல்லை. நபியவர்களிடம் "நீங்கள் தான் நபி என்பது எனக்குத் தெரியாது" என்று பணிவுடன் கூறினாள்.

அவளுக்கு பதில் அளித்த நபி (ஸல்) :
"துன்பத்தில் முதல் கட்டத்திலேயே மேற்கொள்ளப்படும் பொறுமைதான் உண்மையில் பொறுமையாகும்"

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி)  ஆதார நூல்: முஸ்லிம்

## முரடர்களுக்கும் சகிப்புத் தன்மையும் நேர்மையும் வழங்கியவர் நபிகளார் (ஸல்) !

### - லியோபோட் டால்ஸ்டாய்



“நாகரீகம் முற்றிய இக்காலத்திலும் கூட, மக்களை சீர்திருத்த முனையும்போது நாம் அவதிப்படுகிறோம். ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பு, அநாகரீகத்தில் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் புரிந்த சாதனைகளும், சீர்திருத்தங்களும் மகத்தானவை.

முரடர்களுக்கும் கூட வன்முறையற்ற சகிப்புத்தன்மை முதலிய நேர்மை நெறிகளை நபிகள் நாயகம் (ஸல்) வழங்கினார்கள். இத்துடன் நிற்காமல் அவர்களை உண்மையான வாழ்வின்பால் இழுத்துச் சென்று வெற்றியையும் நிலைநாட்டச் செய்த நபிகள் நாயகம் (ஸல்) சிறப்பு வெறும் நாவினால் புகழ்ந்துவிடக் கூடிய ஒன்றல்ல.”

(ரஷ்யப் பேரறிஞரான டால்ஸ்டாய், ரயிலடியில் உட்கார்ந்த நிலையிலேயே உயிர் நீத்தார். அவரது சட்டைப்பையில் ஒரு சிறு புத்தகம் இருந்தது. அதனுடைய பெயர் முஹம்மது நபியின் பொன்மொழிகள்)

தொழுகை நோன்பு தர்மம் ஆகியவற்றை விட சிறந்த செயல் ஒன்றை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா என நபிகள் நாயகம் (ஸல்) தம் தோழர்களிடம் கேட்டார்கள். “கட்டாயம் அறிவியுங்கள்“ என நபித் தோழர்கள் பதிலளித்தார்கள். “மக்களுக்கிடையில் சமரசம் செய்து வையுங்கள். மக்களுக்கிடையில் உறவுகளை சீர்குலைப்பதே அழிவிற்குக் காரணமாகும்” என்றார் நபிகள் நாயகம்.

ஆதார நூல்: திர்மிதி

## நபிகளார் (ஸல்)
## அவர்களின் வீரமும் எளிமையும்!

**- தாமஸ் கார்லைல்**



''முஹம்மது நபி (ஸல்) தமது
23 ஆண்டு சோதனை மிக்க காலத்தில்,
ஒரு வீரருக்குரிய குணாதிசயங்கள்
அனைத்தையும் பெற்றிருந்தார்.

அவரது குடும்ப வாழ்க்கை மிகவும் எளிதாக இருந்தது.
பார்லி ரொட்டியும், தண்ணீருமே அவர் தம் அன்றாட உணவு.
பல மாதங்கள் வரை வீட்டில் அடுப்பு எரிந்ததில்லை.
அவர் தமது பழைய செருப்புக்களையும் கிழிந்த சட்டைகளையும்
தாமே தைத்துக் கொண்டார்.

வருந்தி உழைப்பதும்,
வறுமையால் வாடுவதும்,
இழிந்த மக்கள் விரும்புவதை வெறுப்பதும்,
அவர் தம் வாழ்க்கைப் போக்காக இருந்தது.

எப்போதும் சண்டையிலும், சச்சரவிலும், போரிலும், பூசலிலும்
ஈடுபட்டிருந்த காட்டுமிராண்டி மனிதர்களை முஹம்மது (ஸல்)
போல் உண்மையும், தகுதியும், மனிதத் தன்மையும் இல்லாதவர்
எவருமே நேர்வழியில் நடத்திச் சென்றிருக்க முடியாது.

(Heroes and Hero Worship எனும் நூலில்)

ஒரு முறை (அண்ணல் நபி (ஸல்) அவர்களின் துணைவியர்) ஆயிஷா (ரலி) அவர்களிடம் நபிகள் “நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டில் என்னென்ன செய்பவர்களாய் இருந்தார்கள்?” என்று வினவப்பட்டது. அதற்கு ஆயிஷா (ரலி) கூறினார்கள்: “நபியவர்கள் மனிதருள் மனிதராய் இருந்தார்கள். அவர்களே தம் ஆடைகளைத் துவைத்துக் கொள்வார்கள். தாமே ஆட்டின் பால் கறந்தும் கொடுப்பார்கள்”
அறிவிப்பாளர்: அம்ரா (ரலி) ஆதார நூல்: அல் அதபுல் முப்ரத்

## தர்மம் செய்வது எப்படி என்பதை வரையறுத்தவர் நபிகளார் (ஸல்)!

### - எட்வர்ட் கிப்பன்



''இஸ்லாத்தின் கொள்கைகள் தெளிவுள்ளனவாய் விளங்குகின்றன. தரித்திரர்களுக்கும், ஏழைகளுக்கும் உதவ வேண்டியது ஒரு முக்கியக் கடமையென்று அடிக்கடி குர்ஆன் கற்பிக்கின்றது.

தருமம் செய்வது எப்படி என்பது பற்றி திட்டமாக வரையறுத்துக் கூறிய ஒரே ஒரு சட்ட மேதையாக விளங்குபவர் நபி முஹம்மதே'

(The Fall and Decline of Roman Empire என்ற நூலில்)

"தர்மம் செய்வது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் அவசியமாகும் என்று அண்ணல் நபி (ஸல்) சொன்னார்கள்."
நான் வினவினேன்: அவனால் அவ்வாறு செய்ய முடியவில்லையென்றால்?
"அவன் சம்பாதித்து தானும் உண்ண வேண்டும். ஏழைகளுக்கும் தர வேண்டும் என்று பதிலளித்தார்கள்"

அவனால் அவ்வாறு செய்ய முடியவில்லையென்றால்? என்று நான் கேட்டேன்
"தேவையுள்ள துன்பத்திற்குள்ளான மனிதர் எவருக்கேனும் உதவட்டும் என்று நபி (ஸல்) விளக்கம் அளித்தார்கள்"


அதுவும் அவரால் முடியவில்லையென்றால் என்று நான் கேட்டேன்.
"மக்களை நன்மை புரியும்படி அவர் தூண்டட்டும் என்று நபி (ஸல்) பதில் சொன்னார்கள்"

அவர் அதையும் செய்யவில்லையென்றால் என்று நான் தொடர்ந்து கேட்டேன்
"மக்களுக்கு தீங்கிழைக்காதிருக்கட்டும். இதுவும் ஒரு நற்செயலே என்று அண்ணல் நபி (ஸல்) தெளிவுப்படுத்தினார்கள்."

அறிவிப்பாளர்: அபூமூஸா அல்அதி (ரலி) ஆதார நூல்: முஸ்லிம்

**சமயம், உலகியல்**
**ஆகிய இரு நிலைகளிலும்**
**உலக வரலாற்றில்**
**ஒரு சேர மகத்தான**
**வெற்றி பெற்றவர்**
**நபிகளார் (ஸல்) மட்டுமே!**

**- மைக்கேல் ஹார்ட்**




இந்த உலகத்தில் அளப்பரிய
செல்வாக்குடன் பெரும் தாக்கத்தை
ஏற்படுத்தியவர்களின் பட்டியலில்
முஹம்மது அவர்களை முதலாமானவராகத்
தேர்ந்தெடுத்தது வாசகர்களில் சிலருக்கு வியப்பாக இருக்கும்.
மற்றும் சிலர் ''ஏன் அப்படி?'' என்று வினாவும் தொடுக்கலாம்.

ஆனால்
சமயம், உலகியல் ஆகிய இரு நிலைகளிலும்
ஒரு சேர மகத்தான வெற்றி பெற்றவர்,
வரலாற்றில் அவர் ஒருவரே தாம்!

எளிமையான வாழ்க்கைப் பிடியில், துவங்கிய அன்றைய உலகத்தின் பெரும் கொள்கை ஒன்றை நிறுவி, அதனைப் பரப்பிய பேராற்றல் வாய்ந்த அரசியல் தலைவருமாவார்கள்.

அவர்கள் உயிர் நீத்து பதினான்கு நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் அவர்களின் தாக்கம் - சக்தி மிக்கதும், எல்லாத் துறைகளிலும் பரவி நிற்பதுமாக இன்றும் விளங்குகிறது.''

(மைக்கேல் ஹார்ட் எழுதிய ''அந்த நூறு பேர்'' நூலில்)

அண்ணல் நபி (ஸல்) சொன்னார்கள்:
"நான் அல்லாஹ்வின் புறத்திலிருந்து நற்குணங்கள்
முழுமைப்படுத்துவதற்காக அனுப்பபட்டுள்ளேன்"
ஆதார நூல்: முஅத்தா

## திருகுர்ஆன் கூறுகிறது :

- இது (குர்ஆன்) இறைவனின் வேதமாகும்; இதில் யாதொரு சந்தேகமும் இல்லை. (திருக்குர்ஆன் 2:2)

- இது உலக மக்கள் அனைவருக்கும் ஒரு நல்லுரையேயன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் 68:52)

- (முஹம்மதே) இது ஒரு வேதமாகும்.இதனை உம்மீது நாம் இறக்கியுள்ளோம்;மக்களை அவர்களுடைய இறைவனின் உதவி கொண்டு இருளிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் நீர் கொண்டுவர வேண்டும் என்பதற்காக! (திருக்குர்ஆன் 14:1)

- நாம் இந்தக் குர்ஆனை,அறிவுறை பெறுவதற்கான எளிய வழியாக அமைத்திருக்கின்றோம்.பின்னர் அறிவுரையை ஏற்றுக் கொள்ள எவரேனும் இருக்கின்றாரா? (திருக்குர்ஆன் 54:17)

- சாந்தி உண்டாகும்(இறைவனின்) நேர்வழியைப் பின்பற்றி நடப்போர்க்கு.(திருக்குர்ஆன் 20:47)

- இவர் (முஹம்மத்) நன்மை செய்யுமாறு மக்களை ஏவுகின்றார்; தீமைகளிலிருந்து அவர்களைத் தடுக்கின்றார். மேலும் அவர்களுக்குத் தூய்மையானவற்றை ஆகுமாக்குகின்றார்; தூய்மையில்லாதவற்றைத் தடை செய்கின்றனர். மேலும் அவர்களின் மீதுள்ள சுமையை இறக்குகின்றார். அவர்களைப் பிணைத்திருந்த விலங்குகளை உடைத்தெறிகின்றார். (திருக்குர்ஆன் 7:157)

- உங்களின் இறைவன் கருணை பொழிவதைத் தன்மீது கடமையாக்கிக் கொண்டுள்ளான்.உங்களில் எவரேனும் அறியாமையால் ஒரு தவறைச் செய்துவிட்டு பின்னர் அதற்காக மன்னிப்புக்கோரி,மேலும் தன்னைத் திருத்திக் கொண்டால் திண்ணமாக இறைவன் (அவரை) மன்னித்து விடுகின்றான்; மேலும் அவருடன் இரக்கத்தோடு நடந்து கொள்கின்றான்(திருக்குர்ஆன் 6:54)

- குழப்பம் விளைவிப்பது, கொலையை விட கொடியது ஆகும்.. பூமியில் சீர்திருத்தம் ஏற்பட்ட பின்னர் அதில் குழப்பம் விளைவிக்காதீர்கள். உண்மையில் நீங்கள் இறைநம்பிக்கை கொண்டவராயின் இதில்தான் உங்களுக்கு நன்மை இருக்கிறது. (திருக்குர்ஆன் 2:217,7:85)

## அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள் :

- ஒருவர் தம் செல்வத்திலிருந்து எதை அறவழியில் செலவிட்டாரோ, அதுதான் அவருக்குரிய நன்மை பயக்கும் செல்வமாகும்.
- வாழ்க்கை வசதிகள் அதிகமாக இருப்பது செல்வமன்று; மாறாக போதுமென்ற மனமே உண்மையான செல்வமாகும்.
- நண்பனாயினும், பகைவனாயினும் அளவோடு நடந்துகொள்ளுங்கள். ஏனெனில், நண்பன் பகைவனாகவும், பகைவன் நண்பனாகவும் எந்த நேரத்திலும் மாறக்கூடும்.
- மன இச்சைகளால் நரகம் மூடப்பட்டுள்ளது. சிரமங்களால் சொர்க்கம் மூடப்பட்டுள்ளது.
- பொய் பேசுவதும், பொய் சாட்சியமும் மிகப் பெரும் பாவம்தான்.
- உறவைப் பேணி வாழ்பவருடன் இறைவனும் உறவு பாராட்டுகிறான்.
- தர்மம் சிறிதாக இருப்பினும், அதனை தொடர்ந்து செய்வதே சிறந்ததாகும்.
- கருத்துக்களை விட்டுவிட்டு, சொற்களில் அழகை மட்டும் கொண்டுள்ள பேச்சு, பலன் அளிக்காது.
- விருந்தினரிடம் கோபத்தையும், பதற்றத்தையும் வெளிப்படுத்துவது வெறுக்கப்பட்டதாகும்.
- நற்குணமுடையவரே உங்களில் சிறந்தவர்.
- உலகத்தில் நீ ஒரு வழிப்போக்கனைப் போன்று வாழு.
- வறுமையிலும் வளமையிலும் நடுநிலை பேண வேண்டும்..
- பிறரின் குறைகளைத் துருவித்துருவிப் பார்க்காதீர்கள்
- இருப்பதைக் கொண்டு திருப்தி கொள்வதே என்றும் அழியாத செல்வமாகும்.
- அன்பளிப்பு வழங்குவதில் பிள்ளைகளிடையே பாகுபாடு காட்டுவது விரும்பத்தகாத செயலாகும்.
- எது நமது மனசாட்சியை உறுத்துகிறதோ அதுவே தீமையாகும்.
- உறவினர்களிடமிருந்தே, தானத்தைத் துவங்குங்கள்.